# SUBORDINATE COURT, PADMANABHAPURAM
# CASE NO.SC.105/2015
# Deposition of P.W.1

Name : திரு. பாலைய்யா
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:01.06.2022**

**<u>முதல் விசாரணை</u>**-

நான் முத்தலக்குறிச்சியில் தாமசிக்கிறேன். நான் வழக்கறிஞர் குமாஸ்தாவாக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 16.9.2010 ம் தேதி மதியம் சுமார் 2.15 மணி அளவில் சாப்பிடுவதற்காக தக்கலை பேலஸ் ரோட்டில் உள்ள நாயர் கடைக்கு சாப்பிட சென்ற போது ஆஜர் எதிரி என்னை தடுத்து நிறுத்தி தள்ளய ஓத்த புண்டா மோனே என்று கெட்ட வார்த்தையால் பேசி கையில் இருந்த கம்பியால் எனது தலையில் மூன்று முறை அடித்தார். அதனால் எனது தலையில் இருந்து இரத்தம் பீறிட்டது. எதிரி என்னை பார்த்து முந்தின நாள் நீ என்னிடம் 100 ரூபாய் தராமல் சரக்கு (மது) வாங்கிக்கொண்டு பாக்கி வாங்கி விட்டாய் என்று கூறி என்னை அடித்தார். என்னை திருட்டு பயலே என்று கூறி எதிரி அடித்தார். மேற்படி சம்பவத்தை ஹரிபிரசாத், வில்சன் மற்றும் நிறைய நபர்கள் பார்த்தார்கள். எதிரி என்னை அடித்த கம்பியை கையில் வைத்துக்கொண்டு இந்த துறை தப்பிவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி எனக்கு மரண பயத்தை ஏற்படுத்தினார். என்னை ஒரு ஆட்டோவில் ஏற்றி தக்கலை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். மேற்படி ஆட்டோ பதிவெண் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி பேலஸ் ரோட்டில் உள்ள டாஸ்மார்க் கடையில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறார். என்னிடம் காட்டப்படும்

சட்டைதான் நான் சம்பவத்தின் போது அணிந்திருந்த சட்டையாகும். அது சா.பொ.1. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது நடந்த சம்பவத்திற்கு தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளரிடம் புகார் மனு கொடுத்தேன். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1. வழக்கு சம்பந்தமாக தக்கலை காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடம் வழக்கு சம்பவமானது டார்வின் என்ற வழக்கறிஞர் அலுவலகத்திற்கு முன்பு வைத்து நடைபெற்றதாக கூறினேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.1 புகார் மனுவில் பேலஸ் ரோட்டில் எந்த இடத்தில் வைத்து வழக்கு சம்பவம் நடைபெற்றது என்று கூறவில்லை என்றால் சரியல்ல. டாஸ்மார்க் கடை முன்பு நடைபெற்றதாக கூறியுள்ளேன். அ.சா.ஆ.1 ஐ நான் படித்து பார்த்து கையொப்பம் இட்டேன். அ.சா.ஆ.1ல் டாஸ்மார்க் கடை முன்பு வழக்கு சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்று தெரிந்தே பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு உறவினரோ, நண்பரோ, பழக்கமானவரோ கிடையாது. வழக்கு சம்பவத்தின் போது எதிரியின் பெயரோ அவரது தகப்பனார் பெயரோ, எதிரியின் விலாசமோ எனக்கு தெரியாது என்றால் எதிரியின் பெயர் எனக்கு தெரியும். எதிரியின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. எதிரியின் விலாசம் எனக்கு தெரியும். எதிரியின் வீட்டிற்கு நான் சென்றதில்லை. புகார் மனுவில் எதிரியின் பெயர், தகப்பனார் பெயர், விலாசம் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எதிரி எனக்கு தெரிந்த நபர் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் வழக்கு சம்பவத்தை யாரேனும் நேரடியாக பார்த்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தமிழ் எனக்கு எழுத படிக்க தெரியும். அ.சா.ஆ.1 புகார் மனு நான் கைப்பட எழுதவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 நான் கைப்பட எழுதியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து தக்கலை அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் தக்கலை காவல் நிலையம்

முன்பாகத்தான் செல்ல வேண்டும் என்றால் அவ்வாறும் செல்லலாம் மார்க்கெட் ரோடு வழியாகவும் செல்லலாம். மேற்படி இரண்டு வழிகளில் எந்த வழியாக அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்று காவல் துறையினர் விசாரணையின் போது நான் கூறினேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் பத்மனாபபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்வதற்கு முன்பு தக்கலை காவல் நிலையம் சென்றுவிட்டு அதன் பிறகு சிகிச்சைக்காக மேற்படி மருத்துவமனைக்கு சென்றேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்த போது தக்கலை காவல் நிலையம் சென்று விட்டு அதன் பிறகு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற விபரத்தை கூறினேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கும் போது என்னை தெரியாத நபர் தாக்கியதாகத்தான் புகார் கொடுத்தேன் என்றால் டாஸ்மார்க் கடையில் வேலை பார்க்கும் நபர் என்னை அடித்ததாக கூறினேன். தக்கலை காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கும் போது உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேனா அல்லது காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் மேற்படி இருவரும் காவல் நிலையத்தில் அப்போது இருந்தார்கள். அவர்கள் இருவரிடமும் நான் கூறினேன். அப்பொழுது எதிரியின் பெயரை நான் குறிப்பிட்டு கூறவில்லை. தக்கலை பேலஸ் ரோட்டின் கிழக்கே 50 அடி தள்ளிதான் அரசு மதுபானக்கடை உள்ளது என்றும் ரோட்டின் ஓரமாக மதுபானக்கடை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து 50 அடி தூரத்தில் ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது. சம்பவ இடத்தில் எனது இரத்தம் கீழே வடிந்ததா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சம்பவ இடமானது எப்போதும் ஆட்கள் நடமாட்டம் உள்ள சாலை என்றால் சரிதான். மேற்படி டாஸ்மார்க் கடையின் இருபக்கமும் நிறைய கடைகளும், வழக்கறிஞர் அலுவலகங்களும் உள்ளது என்றால் ஒரு கடையும், ஒரு அவண எழுத்தர் அலுவலகமும், ஒரு வழக்கறிஞர் அலுவலகமும் உள்ளது. எனக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டது போன்று வழக்கு சம்பவத்திற்கு முந்தின நாள் ரூபாய் 100 கொடுக்காமல் சரக்கு வாங்கி கொண்டு பாக்கி தொகையும் பெற்றதான சம்பவம் நடைபெறவில்லை.

ஆனால் அவ்வாறு பணம் கொடுக்காமல் மது வாங்கிக்கொண்டு பாக்கி தொகையும் பெற்றதாக கூறி எதிரி என்னை அடித்தார். நான் புகார் மனு கொடுத்த பிறகு என்னை காவல் ஆய்வாளரும், காவல் உதவி ஆய்வாளரும் விசாரித்தார்கள். முதல் தகவல்அறிக்கையின் நகல் எனக்கு காவல் துறையினரால் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் குற்றதமுறையீட்டாளர் தகவல் கொடுப்பவர் என்ற காலம் 14 ல் கண்ட கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை. இவ்வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் தெரிந்தே எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.6.2018 அன்று எதிரியை நான் கொலை செய்து விடுவதாக மிரட்டினேன் என்று எதிரி என் மீது தக்கலை காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி புகார் மனு எண். 830/2018 என்று கோப்புக்கு எடுக்கப்பட்டு தக்கலை போலீசார் என்னை விசாரித்தார் என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நான் மேற்படி மனு விசாரணையில் எதிரியை எனக்கு தெரியாது என்று வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.